THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# KE4 – Processes, Assurance & Ethics

## September 2019

NOT FOR SALE

All Rights Reserved

## பகுதி- 01

**விடை 01**

1.1

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 12-13 |
| **சரியான விடை: C** |

1.2

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 36 |
| **சரியான விடை : A** |

1.3

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 64 |
| **சரியான விடை : D** |

1.4

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 100 |
| **சரியான விடை : B** |

1.5

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 140 |
| **சரியான விடை : C** |

1.6

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 198 |
| **சரியான விடை : D** |

1.7

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 8-9 மேலதிக பாட உசாத்துணை மூலகம் |
| **சரியான விடை : A** |

1.8

| கற்றல் வெளிப்பாடு/கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 227 |
| **சரியான விடை : D** |

NOT FOR SALE

1.9

| **கற்றல் வெளிப்பாடு/கள்:** |
| --- |
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 297 |
| **சரியான விடை : B** |

1.10

| **கற்றல் வெளிப்பாடு/கள்:** |
| --- |
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 311 |
| **சரியான விடை : B** |

**(மொத்தம் : 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 02**

2.1

| **கற்றல் வெளிப்பாடு/கள் :** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 29 |
| **வெளிவாரி தந்திரோபாய இடர்** - நிதிச்சூழலில் ஏற்படும் மாற்றங்கலான இடர், அதாவது முக்கியமான நாணயமாற்று வீதம் அல்லது வட்டி வீதத்திலான உயர்வு அல்லது தாழ்வினால் ஏற்படும் இடர் அல்லது பங்குச்சந்தை அல்லது பிணைமுறிச்சந்தை ஆகியவற்றின் நிலைமைகளிலான மாற்றம்.<br><br>**உள்ளகத் தொழிற்பாட்டு இடர்** - நிதியறிக்கையிடல் செயன்முறையில் மற்றும் கணக்கீட்டு முறைமையிலான வழுக்கள் மற்றும் தோல்விகளினால் வரும் இடர். உதாரணமாக நிதியறிக்கையிடல் கணக்கீட்டு புத்தக வைப்பு முறைமையிலான இடர்களின் காரணமாக |

2.2

| **கற்றல் வெளிப்பாடு/கள் :** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 18-21 மேலதிக கற்றல் ஆவணம் |
| (a) கட்டுப்பாட்டுச் சூழல்<br>(b) இடர் மதிப்பீடு<br>(c) கண்காணித்தல் |

2.3

| **கற்றல் வெளிப்பாடு/கள் :** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 41 |
| 1. இடரின் சாத்தியமான தாக்கம் குறைவு<br>2. மோசமான இடர் நிகழ்வின் சாத்தியப்பாடு குறைவு<br>3. இதன் விளைவாக மீதியான இடர் நிறுவனத்தின் இடர் ஏற்பு எல்லைக்குள் காணப்படல். |

2.4

| **கற்றல் வெளிப்பாடு/கள் :** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 68 |
| முகாமையின் பொறுப்புக்கள்.<br>(a) கட்டுப்பாடுகளின் வடிவமைப்பினை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும்.<br>(b) கட்டுப்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதனை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.<br>(c) கட்டுப்பாட்டு தகவல்கள் தொடர்புடைய நபர்களுக்கு தொடர்பாடப்படுவதனை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.<br>(d) அவர்கள் கட்டுப்பாடுகளின் பயனுறுதியினை மீளாய்வு செய்து பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிட வேண்டும். |

NOT FOR SALE

2.5

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 85 |
| (a) நிறுவனம் இதற்கு முன்னர் கொள்வனவு செய்திராத ஒரு பொருள் தேவைப்படுகிறது.<br>(b) தற்போதுள்ள வழங்குநரின் கிரயம் மிகவும் அதிகம் எனவே மாற்றீடான வழங்குநர்களிடமிருந்து உடன்படிக்கைக்கான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.<br>(c) தற்போதுள்ள வழங்குநர் குறித்த பண்டத்தை இனிமேல் வழங்கல் செய்வதில்லை அல்லது தேவையான விநியோக நேரத்தை அடைவதற்கு இயலாதவராக உள்ளார்.<br>(d) உடன்படிக்கை பெறுமதி உயர்வு என்பதால் வாங்குபவர் நல்ல விலையொன்றினை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. |

2.6

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 57 |
| (a) கூட்டிணைவு<br>(b) முகாமையின் கட்டுப்பாட்டு மீறல்<br>(c) மனித வழு |

2.7

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 57 |
| **அங்கீகாரமளித்தல் மற்றும் அனுமதியளித்தல் கட்டுப்பாடு**<br>ரூபா 1,000,000 மேற்பட்ட சகல நிலையான சொத்துக் கொள்வனவுகளும் பணிப்பாளர் சபையினர் அங்கீகாரமளிக்கப்படல் வேண்டும்.<br><br>**கணிதரீதியான மற்றும் கணக்கீட்டு கட்டுப்பாடு**<br>பொதுப்பேரேட்டில் பதியப்பட்டுள்ள சொத்துகளுடன் சொத்து பதிவேட்டினை கணக்கிணக்கம் செய்யும் இணக்கப்பாடு. |

2.8

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 249 |
| ஒழுக்கவுடைமை என்பது எது சரி எது பிழை என்பது தொடர்பான தனிப்பட்ட நம்பிக்கையாகும். தனிநபரொருவரின் ஒழுக்கவுடைமை அது அவர்களின் தனிநபர் பெறுமானங்களின் அடிப்படையானதாகும். தனிநபர் பெறுமானங்கள் சரி பிழை பற்றிய தனிநபர் நம்பிக்கைகளாகும். அதனடிப்படையில் ஒழுக்கவுடைமையின் அடிப்படை பெறுமானங்கள் ஆகும். |

NOT FOR SALE

2.9

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
| --- |
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 80 மேலதிக கற்றல் வெளியீடு |
| பொது அக்கறை என்பது தொழிற்திறன்சார் கணக்காளர்கள் பணியாற்றும் வாடிக்கையாளர்கள், கடன் வழங்குனர்கள், அரசுகள், தொழில் தருவோர், தொழில் கொள்வோர், முதலீட்டாளர்கள், வியாபாரங்கள், நிதிச்சமூகம் மற்றும் தொழிற்திறன்சார் கணக்காளர்களின் வேலையில் தங்கி நிற்கும் ஏனையோர் உள்ளடங்கலான மக்கள் மற்றும் நிறுவனங்களிலான சமூகத்தின் ஒட்டுமொத்த நலனினை கருதிநிற்கிறது.<br><br>தொழிற்திறன்சார் கணக்காளர்களுக்கு சமூகத்தில் முக்கியமான வகிபாகம் உண்டு. முதலீட்டாளர்கள், கடன் வழங்குநர்கள், தொழிற் தருவோர் மற்று வியாபார சமூகத்தின் ஏனைய துறைகள், அதுபோன்று அரசுகள் மற்றும் பெருவாரியாக பொதுமக்கள் திறமையான நிதிக்கணக்கீடு மற்றும் அறிக்கையிடல், பயனுறுதி வாய்ந்த நிதி முகாமைத்துவம், வரி மற்றும் பல்வேறு விதமான வியாபார விடயங்களில் திறமையான ஆலோசனை என்பவற்றிற்காக தொழிற்திறன்சார் கணக்காளர்களில் தங்கியுள்ளனர். மேற்படி சேவைகளை வழங்குகின்ற போதான தொழிற்திறன்சார் கணக்காளர்கள் அணுகுமுறை மற்றும் நடத்தைகள் சமூகத்தின் மற்றும் நாட்டின் பொருளாதார நலனில் தாக்கம் செலுத்தக் கூடியது. |

2.10

| கற்றல் வெளிப்பாடு/கள் : |
| --- |
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 304 |
| (a) கணக்காய்வு சான்றுகள் நிறுவனத்தின் வெளியிலான சுயாதீனமான மூலங்களில் இருந்து பெறும்போது மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்தது.<br>(b) கணக்காய்வாளரால் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் நேரில் முறையில் அல்லது குறுக்கீடு மூலமாக பெற்றுக்கொள்ளப்படும் கணக்காய்வுச் சான்றுகளை விட நம்பகத்தன்மை வாய்ந்தது.<br>(c) கணக்காய்வுச் சான்றுகள் காகிதமாக இலத்திரனியல் வடிவத்தில் அல்லது வேறேதேனும் ஊடகத்தில் ஆவணப்படுத்தப்படட வடிவில் காணப்படும் போது மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்தவை.<br>(d) அசலான ஆவணங்களினால் வழங்கப்படும் கணக்காய்வுச் சான்றுகள் பிரதியெடுக்கப்பட்ட அல்லது தொலைநகல் ஆவணங்களினால் வழங்கப்படும் சான்றுகளை விட நம்பகத்தன்மை வாய்ந்தவை |

**(மொத்தம் :30 புள்ளிகள்)**

NOT FOR SALE

## பகுதி 2

### விடை 03

| தொடர்புடைய கற்றல் வெளிப்பாடு/ கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 129,142 |

(a) **வியாபார இடர் - சம்பளப்பதிவேடு**

(i) **பிழையான சம்பளப்பதிவேட்டுக் கணிப்பீடுகளிற்கான இடர்கள்.**

சம்பளப்பதிவேட்டு கணக்கீட்டு செயன்முறையில் வழுக்களுக்கான இடர்கள் காணப்படுகின்றன. மொத்த கொடுப்பனவு அல்லது கழிப்பனவுகள் பிழையாக கணிப்பீடு செய்யப்படலாம். மேற்படி சூழ்நிலையில் சம்பளப் பதிவேட்டு உதவியாளரால் கைமுறைமையாக தயாரிக்கப்படும் சம்பளப் பதிவேடானது அதிகாரி ஒருவரால் கணிப்பீடுகள் வழுக்களற்றவை என்பதனை உறுதி செய்வதற்காக சரி பார்க்கப்படுகின்றது என்பதற்கான எந்தவொரு அறிகுறிகளும் இல்லை. விஷேடமாக சம்பளப் பதிவேடு கைமுறைமையாக செயற்படுத்தப்படும் பொழுது சம்பளப் பதிவேட்டு கணிப்பீடுகளில் வழுக்கள் விடுவதற்காக உயர் இடர் காணப்படுகிறது. உதாரணமாக மேலதிக வேலை நேர பதிவுகள் மற்றும் வருகை பதிவுகள் கைமுறைமையாக பராமரிக்கப்படுகிறது. எனவே அக்கணிப்பீடுகளில் வழுக்கள் விடும் இடர் காணப்படுகிறது.

(ii) **சம்பளப் பதிவேட்டு அதிகாரிக்கான பிழையான தகவல்கள் வழங்கப்படுவதற்கான இடர்கள்.**

சம்பளப் பதிவேட்டினை தயாரிப்பதற்காக பல்வேறு மூலங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களில் உதவியாளர் தங்கியுள்ளார் (உதாரணம்: புதிய ஆட்சேர்ப்புகள், பல்வேறு திணைக்களங்களால் வழங்கப்படும் வருகைப் பதிவுகள், etc….) மேற்படி சூழ்நிலையில், அத்தகைய தகவல்கள் நிறுவனத்தின் அதிகாரி யொருவரினால் அல்லது அதிகாரிகளால் மேற்படி தகவல்கள் சரி பார்க்கப்படுகின்றன என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. புதிய ஆட்சேர்ப்பு மற்றும் விலகல் தொடர்பான பிழையான தகவல்களை அல்லது சரியான தகவல்களை உரிய நேரத்தில் மனிதவள திணைக்களம் சம்பளப் பதிவேட்டு அதிகாரியிற்கு வழங்காமல் இருக்கு இடர் காணப்படுகிறது. இதன் விளைவாக குறை அல்லது முகை கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் இடர் காணப்படுகிறது.

(b) முகாமை **மேலதிக காசினை** குறுங்கால அடிப்படையில் முதலீடு செய்ய முடியும் வழமையாக பணத்தினை இழப்பதற்கான இடர் இல்லாத அல்லது மிகக் குறைந்த முதலீடுகளில் **முதலீடு** செய்யலாம். உதாரணமாக பங்குச் சந்தையில் பங்குகளில் **காசினை** முதலீடு செய்வது கூடிய இடரினை கொண்டது, ஏனெனில் பங்கு விலைகள் வீழ்ச்சி அடையலாம். மறுபுறத்தில் மேலதிக காசு மீதியினை மிகவும் பாதுகாப்பான வழிகளில் முதலீடு செய்யலாம். உதாரணமாக நிறுவனங்களிலிருந்தான **வைப்புக் கணக்குகள்** அல்லது அரசாங்கத்தினால் வெளியிடப்படும் குறுகிய கால கடன் ஆவணங்கள். முகாமையிடம் முதலீடுகள் பற்றிய போதிய அறிவின்மையிால் கூடிய இடருடான பங்கு முதலீடு போன்ற முதலீடுகள் பொருத்தமானவை அல்ல. எனவே, கம்பனி குறைந்த சிக்கலுடைய முதலீடுகளான நிலையான வைப்புகள் அல்லது திறைசேரி முறிகள் ஆகியவற்றின் கருத்திற்கொள்ளலாம்

**(மொத்தம் : 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

விடை 04

| தொடர்புடைய கற்றல் வெளிப்பாடு/ கள்: |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 237-239,262 |

(a)

| | |
|---|---|
| **குறைபாடு** – கொள்வனவு கட்டளைகள் தொடர் வரிசை இலக்கமிடப்பட்டவை அல்ல | **தாக்கம்** - கொள்வனவு கட்டளை அறைகுறையாக காணப்படலாம் மேலும் பூர்த்தி செய்யப்படாத கட்டளைகளின் நிலைமையினை அவதானிக்கும் / கண்காணிக்கும் முறைமை இல்லாது காணப்படல். |
| **குறைபாடு** - ரூபா 500,000 மேற்பட்ட கட்ட ளைகளை தவிர்த்து ஏனைய கொள்வனவுக் கட்டளைகள் அவை வெளியே அனுப்பப்பட முன் அங்கீகாரமளிக்கப்படட நபரினால் அங்கீக ரிக்கப்படுவதில்லை | **தாக்கம்** - ரூபா 500,000 வரைக்கும் அங்கீகார மளிக்கப்படாத பண்டங்களிற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்படலாம். |
| **குறைபாடு** – வழங்குநர் வழங்குதலின் வேகத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் | **தாக்கம்**- குறை தரத்திலான பொருட்கள் கட்டை ளையிடப்படலாம் அல்லது குறித்த வழங்குநர்களிடமிருந்தான பொருட்களிற்கு கூடிய விலைகள் செலுத்தப்படலாம். |

(b) **அக்கறையிலான முரண்பாடுகள்** - கணக்காளர் ஒருவருக்கு அவர் இரு வேறுபட்ட விசுவாசங்களை அல்லது அர்பணிப்புக்களை கொண்டுள்ள போது அவை எப்போதாவது ஒன்றுடன் ஒன்று முரண்படும் போது அக்கறையிலான முரண்பாடு ஏற்படுகிறது. பொதுவான அக்கறையிலான முரண்பாடு சுய – அக்கறையுடன் தொடர்பானது. இது ஒரு தனிநபரின் தனிப்பட்ட அக்கறை கம்பனியின் அக்கறையிலிருந்து வேறுபடும் போது நிகழ்கிறது.

**பரிசுகளை ஏற்றுக் கொள்ளல்** - பரிசுகள் கணக்காளரின் சுயாதீனத் தன்மை, நடுநிலைமை மற்றும் இரகசியம் பேணல் ஆகியவற்றிற்கான சுயக்கறை மற்றும் தாக்கம் செலுத்தல் அச்சுறுத்தல்களை உருவாக்க முடியுமான ஊக்குவிப்பிக்களாகும். பரிசுகளை வழங்கும் நபர்கள் கணக்காளரின் வேலையின் வெளியீட்டில் அக்கறை உடையவராக இருப்பர். பரிசுகள் மற்றும் விருந்தோம்பல்கள் கணக்காளரின் முடிவுகளின் நடுநிலைமையில் தாக்கம் செய்யும் முயற்சியாக அல்லது அவர்களை ஏதேனும் செய்ய வைப்பதற்காக அல்லது செய்யாமல் இருப்பதற்காக அமையலாம்.

**( மொத்தம் : 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 05**

| **கற்றல் வெளிப்பாடு/ கள்:** |
| --- |
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 207,209 |

(a)

1. பொருட்களை பெற்றுக்கொள்ளக் கூடாத அங்கீகாரம் பெறப்படாத நபருக்கு பொருட்களை விநியோகிக்கும் இடர் மற்றும் அது திருட்டுக்கு வழிவகுத்தல்.
2. மனித தவறுகளினால் கைமுறைமையாக பராமரிக்கப்படும் இருப்புப் பதிவுகளில் வழுக்கள் ஏற்படும் இடர் கைமுறை முறைமைகள் செயற்திறன் அற்றவை மட்டு மல்லாது பாரிய தொகைகளுடன் கையாளும் போது கிரய பயனுறுதியற்றவை.
3. முறையற்ற களஞ்சியப்படுத்தலால் இருப்புகள் வானிநிலையின் மூலகத்திற்கு வெளிப்படும் பௌதீக இடர்.
4. நாடு பூராகவும் உள்ள விற்பனை நிலையங்களிற்கு மத்திய களஞ்சிய சாலையிலிருந்து விநியோகம் செய்வதற்காக மேலதிக செலவுகள்.
5. முக்கியமான இருப்பின் இருப்பின்மை இடர் அல்லது மேலிதிக இருப்பு இடர்.

(b)

**முத்தரப்பு உறவு**
சகல உறுதிப்பாட்டு நியமனங்களும் அவை நியாயமான அல்லது வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு நியமனமாக இருந்தாலும் மூன்று தரப்புக்களை உள்ளடக்கலாம்.

**உத்தேச பயனாளர்கள் - வங்கி**
இது தொழிற்திறனாளி தயாரிக்கும் உறுதிப்பாட்டு அறிக்கையினை பயன்படுத்தும் நபர். நபர்கள் அல்லது குறிப்பிட்ட நபர் வர்கங்களை குறிக்கும்.

**பொறுப்புடைய தரப்பு – முகாமை**
விடயப் பொருட்களிற்கு அல்லது உறுதிப்பாட்டு நியமனத்தின் விடயப்பொருிற்கு (ஒரு நேர் அறிக்கையிடல் தகவல்களிற்கு நியமனத்தில்) பொறுப்பான நபர் (அல்லது நபர்கள்). இது பொதுவாக உறுதிப்பாட்டில் ஈடுபடுத்தும் கமபனியாகும்.

உறுதிப்பாட்டு நியமனத்தை நடாத்துவதற்கான தொழிற்திறனாளர் - கணக்காய்வாளர்.
விடயப்பொருளை மீளாய்வு செய்து உறுதிப்பாடு வழங்கும் தொழிற்திறன்சார் சேவையளிக்கும் தனிநபரை குறிக்கிறது.

**( மொத்தம் : 10 புள்ளிகள்)**

**விடை 06**

| **தொடர்புடைய கற்றல் வெளியீடு/ கள்:** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 303,304,305,307 |

(a)

**கணக்காய்வுச் சான்றுகளின் பொருத்தமான தன்மை**

- தொடர்புடைமை – இது கணக்காய்வு செயன்முறையின் நோக்கத்திற்கு கருத்திலுள்ள நிதிக் கூற்று உறுதிச் சொல்லிற்கும் இடையிலான தர்க்க ரீதியான தொடரினை கருத்தில் கொண்டது. கணக்காய்வுச் சான்று கணக்காய்வு நோக்கத்தினை அடைய உதவும் போது அது தொடர்புடையதாகும்.

- நம்பகத் தன்மை – சான்றின் நம்பகத் தன்மை அதன் மூலகம் மற்றும் இயல்பினால் தாக்கம் செலுத்தப்படுவதுடன் அது அவை பெற்றுக்கொள்ளப்படும் தனிப்பட்ட நிலைமைகளில் தங்கியுள்ளது.

(b)

(i) **கணக்காய்வுச் சான்றுகளின் அளவு**

கணக்காய்வுச் சான்றுகளின் அளவு கணக்காய்வு செயய்யப்படும் பகுதியிலான இடர் அளவின் அடிப்படையில் தாக்கமடையக் கூடியது. இந்த இடரானது பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் தரத்தினாலும் பாதிப்புக்கு உள்ளாகின்றது. சான்றுகள் உயர் தரமுடையதாய் காணப்பட்டால் கணக்காய்வாளருக்கு சான்றுகள் குறைதரமாக காணப்படும் போது தேவைப்படும் சான்றின் அளவினை விட குறைவான சான்றுகள் போதியனவாகும். எனவே பயிலுநர் கணக்காளரின் நோக்கு முற்றிலும் சரியானது அல்ல.

(II) **கணிசமான பரிசோதனைகள்**

| **கணிசமான பரிசோதனைகள்** | **கட்டுப்பாட்டு பரிசோதனைகள்** |
|---|---|
| கலன கடந்த வருடத்திற்கான ஒப்பிடடு செலவு களிற்கான முரண் பகுப்பாய்வு வொன்றினை செய்வதுடன் வழமைக்கு மாறான முரண்கள் விசாரணை செய்யப்படும். (பகுப்பாய்வு வழி முறைகள்) | கொடுப்பனவு சீட்டைகள் பிரதி கணக்காளரால் தொடர்புடைய ஆவணங்களுடன் சரிபார்க் கப்படும். (பரிசீலனை செய்தல்) கலன மேற்படி கட்டுப்பாட்டு தொழிற் பாட்டு பயனுறுதியுடையதா என்பதை பரிசீலி ப்பார். |
| கலன பின்வருவனவற்றிற்கான கிடைக்கப்பெறும் சான்றாவனங்களை சரிபார்ப்பார்.<br>• நீதிச் செலவுகள்<br>• அபராதங்கள் மற்றும் தண்டப்பணச் செலவுகள்<br>• ஆராய்ச்சி செலவுகள்<br>(விபரமான பரிசோதனைகள்) | கொடுப்பனவுச் சிட்டைகள் முறைமையினால் தொடரிலக்கங்களுடன் உருவாக்கப்படுகின்றது. முறைமையானது தொடரிலக்க வரிசையினை பராமரிக்கும் முகமாக உள்ளமைக்கப்பட்டுள்ளதா என்பதனை பரிசீலிப்பதற்காக கலன தகவல் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்வார். |

**(மொத்தம் :10 புள்ளிகள்)**

NOT FOR SALE

பகுதி 3

**விடை 07**

| **தொடர்புடைய கற்றல் வெளிப்பாடு/ கள்:** |
|---|
| பாடகைநூல் குறிப்பு: பக்கம்: 148 மேலதிக கற்றல் வெளியீடு |

| (a) **பலவீனங்கள்** | (b) **இடர்கள்** |
|---|---|
| காசு காசுப் பெட்டியினுள் ஒரு வார காலத்திற்கு வைத்திருக்கப்படல். தினசரி காசுச் சேகரிப்பு தினசரி வங்கியில் இடப்படுவதில்லை. | ஒரு வாரத்தினுள் காசாளரினால் காசினை உருளச் செய்கின்ற (rolling) மற்றும் அங்கீகா ரமளிக்கப்படாத நபரினால் களவாடப்படும், களவு தவறுதலாக கையாளல் தொடர்பான இடர். |
| தனிப்பட்ட விற்பனைகளுக்குப் பதிலாக காசுப் பெறுவனவுகள் காசுப் பதிவேட்டிற்கு மொத்தமாக பதிவிடப்படல். | காசாளர் விற்பனைகளை இணைத்து ரூபா 2,000 மேற்பட்டதாக்கி அதனை கழிவிற்கு உட்படுத்த களவு செய்யும் இடர். மொத்த விற்பனைக்கான கழிவுகள் தனித்தினயாக விற்பனைகள் பதிவு செய்யப்பட்டால் கழிவிற்கு உரித்துடையவையற்றவையாக இருக்கலாம். அத்தகைய கழிவுப் பெறுமதிகள் காசாளரால் களவாடப்படலாம். |
| காசு, விற்பனை பெறுவனவுகள் மற்றும் வங்கியிடல் செயன்முறைகள் காசாளரால் கையாளப்படுகிறது. | காசாளரினால் காசினை உருளச் செய்து களவாடல் தவறுதலாக கையாளல் திருடும் இடர். |
| கைமுறையான சிட்டைகள் காசுப் பெறுவனவுகளை பதிவு செய்யும் போதும் காசுப் பதிவேட்டுடன் இணக்கம் செய்யும் போதும் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. | வழுக்களுக்கான இடர் மற்றும் விற்பனையின் பூரணத்துவம் ரூபா 2,000 மேற்பட்ட விற்ப னைக்கான கைமுறை விற்பனை சிட்டைகளுடன் சரி பார்க்கப்படுவதில்லை. இதன் விளைவாக சேகரிக்கப்பட்ட விற்பனைகளுக்கும் பதிவு செய்யப்பட்ட விற்பனைக்கும் இடையில் வேறுபாடு காணப்படும். |
| காசு வைப்புச் சிட்டைகள் மாத்திரமே புள்ளி விற்பனை முறைமையின் சிட்டைகளுடன் ஒப்பிடப்படுகின்றன. | களவாடப்படும் இடர் மற்றும் சம்பளத்திற்கான பதிளிட்டு இடர். |
| கழிவுகள் அங்கீகரிக்கப்படுவதில்லை. காசாளர் அவரின் விருப்ப அடிப்படையில் கழிவு வழங்கல் | காசாளர் தனது சொந்த நலனிற்காக கழிவுகள் மாற்றியமைக்கலாம். |

| (c) **இடர்கள்** | (d) **கட்டுப்பாடு** |
|---|---|
| கடன் தரக்குறையுடைய வாடிக்கையாளர்களுக்கு பொருள் வழங்கல், ஏனெனில் சகல பெரு நிறுவன வாடிக்கையாளர்களும் கடன் திறனை மதிப்பிடாமல் 1 மாத கால கடன் காலம் வழங்கப்படல் வாடிக்கையாளர் கொடுப்பனவு செய்யாமை இடர். | வாடிக்கையாளர்கள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் தனிப் பயனா க்கப்பட்ட மற்றும் முன்னரே அங்கீகரிக் கப்பட்ட கடன் அளவு மற்றும் தவணைக் காலம் பொருத்தமாக அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். வாடிக்கையாளரின் செலுத்துதல் இயலுமையை மீள் மதிப்பீடு செய்தல். |
| இருப்புப் பதிவுக் பராமரிக்கப்படுவதில்லை மேலும் இருப்பின்மையை ஈடு செய்வதற்காக குறைதரமுள்ள காகிதாதி இருப்புக் கொள்வனவு செய்யும் இடர். | ஆகக் குறைந்த தரநிர்ணய நியமங்களை அறிமுகம் செய்தல் மற்றும் அங்கீகார மளிக்கப்பட்ட வழங்குநர் பட்டியலை கொண்டிருத்தல். |
| நாளாந்த விநியோகங்கள் பட்டியல் மற்றும் கட்டளைகளுடன் சரிபார்க்கப்படுவதில்லை. எனவே குறை அல்லது மேலதிக விநியோகங்கள் இடம்பெறலாம். | விநியோகிக்கப்படும் பொருட்கள் ஒன்றோடு ஒன்று சுயாதீனமாக விநியோகம் செய்ய முன்னர் சரி பார்க்கப்படல் வேண்டும். |
| மொத்த விற்பனை முறை ஒரு நபரினால் கையாளப்படுகின்றது, அதாவது விற்பனை உதவியாளர் எனவே மோசடி இடருக்கான வாய்ப்புகள். | கட்டளைகள் பெற்றுக்கொள்ளல், பட்டியலிடல் மற்றும் பொருள் விநியோகம் ஆகியவற்றிக்கு இடையேயான வேலைப்பகிர்வு. |
| கட்டளைகள் மதிப்பீடு செய்யப்படாமையினால் பூர்த்தி செய்யப்பட முடியாத கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படலாம். | விற்பனை கட்டளைகள், தொகை, விநியோகத் திகதி, மற்றும் கிடைப்பனவு என்பவற்றிற்காக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

NOT FOR SALE

| | |
|---|---|
| இருப்புப் பதிவேடுகள் பராமரிக்கப்படாததினால் இருப்பின்மை காரணமாக விநியோகங்கள் தாமதம் ஆகலாம். | இருப்பு பதிவுகள் மற்றும் மட்டங்களை முறையாகப் பராமரித்தல். |
| மதிப்பீடு இல்லாமல் பட்டியல் இடப்படுவதனால், குறை பட்டியலிடல், மிகை பட்டியலிடல் அல்லது இரு முறைப் பட்டியலிடல் இடம்பெறலாம். | பட்டியல்கள் ஒரு நபரினால் சரி பார்க்கப்பட்டு இன்னொரு நபரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

(e)

(1) கழிவுகள்: முந்திச் செய்யும் கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படும் கழிவுகள் கொடுப்பனவுகளை முன்னரே செய்து முடிக்க மக்களை ஊக்குவிக்கும்.

(2) விரைவாக பின் தொடரல்: ஒரு வாடிக்கையாளர் கொடுப்பனவினை தாமதிக்கும் போது, அதனை உடனடியாக பின் தொடரல்.

**(மொத்தம் : 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

**பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer**

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல் அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

© 2019 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

NOT FOR SALE